

சென்னை, கிண்டி அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில், நேற்று (21.05.2023) தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, ஆய்வு மேற்கொண்டார். உடன் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முகமது நசிமுத்தின், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் கொ.வீர ராகவ ராவ், மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

# செஞ்சி அருகே வரிக்கல் ஊராட்சியில் 100 நாள் வேலை பணிகள்!

செஞ்சி மே 22-

விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களின் வளர்ச்சி திட்ட பணிகளை கடந்த மாதம் விழுப்புரத்தில் முதலமைச்சர் கள ஆய்வு மேற்கொண்டார்.

இதை தொடர்ந்து செஞ்சி தொகுதியில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளைசிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் திடீர் ஆய்வு மேற்கொண்டுவருகிறார்.

அந்த வகையில் செஞ்சி ஒன்றியம் வரிக்கல் ஊராட்சியில் உள்ள சித்தேரியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ஏரியை ஆழப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

இப்ப பணியினை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது பணியில் ஈடுபட்டிருந்த பணியாளர்கள் விவரம் குறித்தும் இந்த பணியில் பராமரிக்கப்படும் வருகை மற்றும் சம்பளம் பதிவேடுகளை அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஆய்வு செய்தார்.



திருவள்ளூர் மாவட்ட முன்னாள் துணைச் செயலாளரும் திருவள்ளூர் மேற்கு மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளருமான ஐ.ஏ.மகிமைதாஸ் 18-05-2023 அன்று இயற்கை எய்தினார். இந்த நிலையில் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் திருவள்ளூர் ஜெயா நகரில் உள்ள இல்லத்தில் நேரில் சென்று திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் நடுகுத்தகை கே.ஜெ.ரமேஷ், திருவள்ளூர் நகரச் செயலாளர் சி.சு. ரவிச்சந்திரன் மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.ஜெயபாலன், ஒன்றிய செயலாளர் பூவை எம்.கமலேஷ், மேற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி.மோதிலால், நகர துணைச் செயலாளர் ராஜேஷ்வரி கைலாசம், நகர இளைஞர் அணி அமைப்பாளர் ஆ.பவளவண்ணன், வட்ட செயலாளர் நரேஷ், நிர்வாகிகள் ஜி.பாண்டியன், வீனஸ், காக்களூர் ராஜ்குமார் உள்பட பலர் உள்ளனர்.

துறைமுகம் மேற்கு பகுதி

# இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம்.சண்முகசுந்தரம் - மு.வித்யா மணவிழா!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமை!

சென்னை, மே.22-

சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் மேற்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம். சண்முகசுந்தரத்திற்கும் மு.வித்யாவிற்கும் இன்று (22.5.2023 - திங்கள்கிழமை) காலை 6.30 மணி முதல் 7.30 மணிக்குள் கொத்தவால்சாவடி கன்னிகா பரமேஸ்வரி கலை அறிவியல் கல்லூரி வளாகத்தில் இந்து சமய அறநிலையத்துறை மற்றும் பெருநகர சென்னை வளர்ச்சி குழுமம் அமைச்சர், சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு தலைமையில் திருமணம் நடைபெற உள்ளது.

விழாவிற்கு துறைமுகம் மேற்குப் பகுதி செயலாளர் எஸ்.முரளி, துறைமுகம் கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.ராஜசேகர், தலைமை செயற்குழு உறுப்பினர் எம். விஜயகுமார், மாவட்ட பொருளாளர் இரா.ஆசாத் எம்.சி., மாவட்டத் துணைச் செயலாளர் ஜி.எம்.தேவன், மண்டல குழு தலைவர் பி.ஸ்ரீராமலு எம்.சி., மாநில சிறுபான்மை நலப்பிரிவு துணைச் செயலாளர் மருத்துவர் என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சி. மகேஷ் குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பா.ஜெகதீஷ்,

பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.இ.கனி, ஆர்.கலைச்செல்வி, மாமன்ற உறுப்பினர் கே.சரஸ்வதி எம்.சி., மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் எம். விநாயகம், மாவட்டத் தொண்டரணி அமைப்பாளர் பி.விஜயகுமார், துறைமுகம் மேற்கு பகுதி துணைச் செயலாளர் கே.ஆர்.அபரஞ்சி, சேப்பாக்கம் பகுதி பொருளாளர் வி.பி.சிதம்பரம், மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் பூங்கா நகர் ஜே. கண்ணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர், கழக அணிச் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., மேயர் திருமதி.பிரியா ராஜன், வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றியழகன், திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் பி.தாயகம் கவி, அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், மண்டலக் குழு தலைவர் திருமதி. சரிதா மகேஷ் குமார், கூ.பி. ஜெயின், பி.கே.மூர்த்தி, எஸ்.மதன்மோகன், நேதாஜி யூ.கணேசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

நிறைவாக 59 அ வட்டக் கழக செயலாளர் சேப்பாக்கம் வே.பா.பிரபாகரன், 57 அ வட்டக் கழக செயலாளர் பா.அண்ணாதுரை ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

கோ.தளபதி தலைமை: பொன்முத்துராமலிங்கம் - சேடப்பட்டி மு.மணிமாறன் முன்னிலை!

# மதுரையில் செல்லூர் ஜி.ரவி இல்ல மணவிழா!

## அமைச்சர் பி.மூர்த்தி - பி.டி.ஆர்.பழனிவேல்தியாகராஜன் வாழ்த்து!

மதுரை, மே 22 -

மதுரை மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் செல்லூர் ஜி.ரவி இல்ல திருமணம் மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., தலைமையில் மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், முன்னாள் அமைச்சர் பொன்முத்துராமலிங்கம், மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் ஆகியோர் முன்னிலையில் சிறப்பாக நடைபெற உள்ளது, இவ்விழாவில் திரளான கழக நிர்வாகிகள் பங்கேற்க உள்ளார்கள் அதன்விபரம்.

மதுரை மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் செல்லூர் ஜி.ரவி & ஆர்.கலைவாணி புதல்வன் திலீபன்ராஜா, கே.சீனிவாசன் & லெட்சுமி தம்பதியரின் புதல்வி சுவாதி என்ற பூஜாவுக்கும் திருமணம் வருகின்ற 25.05.2023 வியாழக்கிழமை காலை 10.30மணிக்குள் 12மணிக்குள் மதுரை காமராசர் சாலையில் உள்ள சேம்பர் ஆப் காமர்சில் நடைபெற உள்ளது. சிறப்புமிக்க இத்திருமண விழாவிற்கு மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., தலைமை வகிக்கிறார். மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், முன்னாள் அமைச்சர், கழக உயர்மட்ட செயல்திட்ட குழு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம், மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன், தலைமை தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு, தீர்மானக்குழு செயலாளர் அக்ரி கணேசன், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.தனசெல்வம், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், ம.தி.மு.க. மாவட்ட செயலாளர் பூமிநாதன் எம்.எல்.ஏ., ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

மாநில மகளிர் அணி துணை செயலாளர் தமிழரசி ரவிக்குமார், மாநகர் மாவட்ட துணை செயலாளர் ஜெ.மூவேந்திரன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் சூரியகலா கலாநிதி, கிழக்கு ஒன்றிய செயலாளர் அ.பா.ரகுபதி, மேற்கு ஒன்றிய குழு தலைவர், விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட அமைப்பாளர் பா.வீரராகவன், ஒன்றிய செயலாளர் பொதும்பு தனசேகர், கிழக்கு ஒன்றிய குழு தலைவர் மணிமேகலை ராஜேந்திரன், துணை சேர்மன் எ.பி.வி.பாலாண்டி, மாநில இலக்கிய அணி துணை அமைப்பாளர் நேரு பாண்டியன், முன்னாள் ஆனையூர் பகுதி கழக செயலாளர் டி.எம்.பொம்மதேவன், கிராம தலைவர் எம். செல்லப்பாண்டியன், யாகப்பாநகர் பி.அழகுபாண்டி, மதுரை மாநகராட்சி முன்னாள் மேயர் சி.ராமச்சந்திரன், அரசு வழக்கறிஞர் ஜவகர் ஆகியோர் வரவேற்புரை நிகழ்த்தி சிறப்பிக்க உள்ளார்கள்.

மதுரை மாநகர் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, பகுதி, வட்டக்கழக செயலாளர்கள், நிர்வாகி கள், மண்டல தலைவர்கள், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள், வழக்கறிஞர்கள், கழகத்தினர், மணமகன், மணமகள் வீட்டார், உறவினர்கள், நண்பர்கள் என திரளானோர் பங்கேற்று திருமணவிழா வினை சிறப்பிக்க உள்ளார்கள். விழாவில் ஆனையூர் பகுதி அவைத்தலைவர் சேதுராமலிங்கம், நெல்பேட்டை மாவட்ட பிரதிநிதி ஆர்.கண்ணன், வட்டச் செயலாளர் ஆர். ரமேஷ் பாபு, கோரிப்பாளையம் அவைத் தலைவர் வீர.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் நன்றியுரையாற்ற உள்ளார்கள்.

மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமை! தி.மு.தனியரசு - க.வீ.சதீஷ்குமார் வரவேற்புரை! இன்று

# திருவொற்றியூர் கிழக்கு - 12வது வட்டத்தில் தெருமுனைக் கூட்டம்!

## முரசொலி மூர்த்தி சிறப்புரை! கலாநிதி வீராசாமி எம்.பி. - கே.பி.சங்கர் எம்.எல்.ஏ.- வீ.கவி கணேசன் எம்.சி. பங்கேற்பு!

சென்னை, மே.22-

திருவொற்றியூர் கிழக்குப் பகுதி - 12வது வட்டக் கழகம் மற்றும் இளைஞரணி சார்பில் திராவிட மாடல் அரசின் இரண்டாண்டு சாதனைகளை விளக்கி தெருமுனைக் கூட்டம் நடைபெறுகிறது.

இன்று (22.5.2023 - திங்கட்கிழமை) மாலை 4.00 மணியளவில் எழுத்துக்காரன் தெருவில் நடைபெறும் இக்கூட்டத்தில், கிழக்குப் பகுதிச் செயலாளர் தி.மு. தனியரசு எம்.சி., 12வது வட்டச் செயலாளர் க.வீ. சதீஷ்குமார், மு.கலைவாணன், டி.ஜி.ஆர்.மணிவண்ணன் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

ஆர்.சி.ஆசைதம்பி, இரா. குமரேசன், எம்.வி.குமார், ஆர்.எஸ்.சம்பத், கே.பிரபாவதி, பி.எஸ்.சைலஸ், எஸ். பாஸ்கர், ம.ஜெயராமன், வி.வேலு, வட்டச் செயலாளர்கள் த.கார்த்திகேயன், டி.சி.வி.மணிகண்டன், எம். எல்.சரவணன், எஸ்.தமிழ் செல்வன், குறுத்து சி.முனுசாமி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

தலைமைக் கழகப் பேச்சாளர் முரசொலி மூர்த்தி சிறப்புரையாற்றுகிறார்.

டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., தலைமைக் கழக வழக்கறிஞர் வீ.கவி கணேசன் எம்.சி., திருவொற்றியூர் தொகுதி - தலைமைக் கழகப் பார்வையாளர் மயிலை சி.தசரதன் ஆர்.பத்மநாபன், மிசா பா. மதிவாணன், வி.ராமநாதன், குறிஞ்சி எஸ்.கணேசன், எம். ஆனந்தன், இரா.முருகேசன், டி.ஏ.ராஜி, பி.சாந்தி பக்தன், சு.சந்தானம், அ.பெ. சி.உ.உசிலை வேந்தன் உள்பட பலரும் இக்கூட்டத்தில் கலந்து கொள்கின்றனர்.

எஸ்.விஜயகுமார் நன்றி கூறுகிறார்.

12வது வட்டக் கழகச் செயலாளர் க.வீ.சதீஷ்குமார் இந்நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்துள்ளார்.

மாதவரம் எஸ். சுதர்சனம் நல உதவிகள் வழங்கினார்!

# மாதவரம் தெற்கு 28வது வட்ட கழக இளைஞரணி சார்பில் சாதனை விளக்கக் கூட்டம்!

## தலைமை : டி.ராமகிருஷ்ணன்! கரூர் முரளி சிறப்புரை! எஸ்.நந்தகோபால் - ஜி.துக்காராம் பங்கேற்பு!

சென்னை,மே.22-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்கு பகுதி 28 வட்டக் கழக இளைஞர் அணி சார்பில் தமிழ்நாடு முதல்வரின் திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் சென்னை வடகிழக்கு மாவட்ட துணைச் செயலாளர் டி.ராமகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

இப்பொதுக் கூட்டத்தில் சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் கலந்து கொண்டு 500 மகளிர்களுக்கு சேலை, மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர சைக்கிள் மற்றும் 10,11,12, வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவ மாணவியருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார் .

தலைமை கழக பேச்சாளர் கரூர் முரளி திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனையை மக்களுக்கு விளக்கி பேசினார்.

இதில் மாதவரம் 3 வது மண்டல குழு தலைவர் 25வது வட்டக் கழக செயலாளர் எஸ்.நந்தகோபால் மாதவரம் தெற்கு பகுதி செயலாளர் ஜி.துக்காராம் தலைமை செயற்குழு உறுப்பினர் மிசா.பா.மதிவாணன் 28 வது வட்ட கழக செயலாளர் எம்.பிரேம்குமார் 28வது வார்டு மாமன்ற உறுப்பினர் எஸ்.கனிமொழி சுரேஷ் மாவட்ட நிர்வாகி பா.அறிவழகி,

மாமன்ற உறுப்பினர்கள் ஜி.திருமலைதுரைசாமி, அ.சந்திரன், மாதவரம் தெற்கு பகுதி கழக நிர்வாகிகள் இ.மோகன், மாவட்ட பிரதிநிதிகள் டி.எஸ். இளங்கோவன், கோட்டை மோசஸ், 28வது வட்ட கழக நிர்வாகிகள் சி.கே. கோபால், எஸ்.எம்.பன்னீர் செல்வம், டி.ஆர்.செங்குட்டுவன், எஸ்.எம்.மோகன், ஏ.சசிகுமார், உ.காந்திமதி, உதயச்செல்வன், எஸ். நிசார், அஹமத், ஏ.ஜெயகுமார், சி.கே.ஜி.தர்மராஜ், சந்திரன்,

மா.போ.வே.ராஜா, டி.மதன், எஸ்.கரன்ராஜ், பி.காசிராஜன், ஆசைத்தம்பி, மற்றும் 28வது வட்ட செயல்வீரர்கள் எஸ்.ஆர்.பிரசாத், டி.ராமன், வி. வேனு, எஸ்.ராஜன், கே.எஸ். ரவிக்குமார்,

எம்.நாகராஜ், டி.ஆனந்தன், ஏ.ஏசு ஐ.இளங்கோ, இ.ஏஞ்சல், பா.நெல்சன், எஸ்.பாலாஜி, ஜே.ரவணன், ஏ.வினோத் குமார், டி. ஆகாஷ், எஸ்.விக்கி, விஜய், உதயசூரியன், என்.சுபாஷ், எம்.மதன், ஆர்.ஜெயக்குமார், யு.ரோஷன், பி.நிர்மல் குமார், ஆர்.தினேஷ் குமார்,

எம்.பிரவீன் குமார், மகளிர் அணி செல்வி, சர்லின், தேவி, ஏ.சுஜாதா, அமுலு, கீதா, யு.ரமா, எம்.வள்ளி, சாந்தி, ஏகவள்ளி, வெள்ளிமா, அனிதா, கௌரி, ஆகியோர் கலந்து கொண்டனர்.

டி.ஆர்.ரவீந்திர குமார் நன்றி கூறினார்.

திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டுச் சாதனையை விளக்கி

# திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் இளைஞர் அணி சார்பில் தெருமுனை கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் ஆவடி சா.மு. நாசர் அறிவிப்பு!



திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் இளைஞர் அணி சார்பில் கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையான திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனையை விளக்கி தெருமுனை கூட்டம்கழக இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கீழ்க்கண்ட இடங்களில் நடைபெறும் விவரம் :

நாள் : இன்று 22-05-2023 நேரம் / மாலை 5.மணியளவில்

| பகுதி | தலைமை | பேச்சாளர்கள் | இடம் |
|---|---|---|---|
| ஆவடி கிழக்கு பகுதி | பேபிசேகர் | எம்.எம். அப்துல்லா எம்.பி, | திருமுல்லைவாயில் 7வது வார்டு |
| பூவிருந்தவல்லி நகரம் | ஜி.ஆர்.திருமலை | எம்.எம்.அப்துல்லா எம்.பி | செட்டியார் தெரு 2 வது வார்டு |
| திருவேற்காடு நகரம் | என்.இ.கே.மூர்த்தி | கொறடா கோவிசெழியன் | ராஜரத்தினம் தெரு 10 வது வார்டு |
| ஆவடி வடக்கு பகுதி | ஜி.நாராயண பிரசாத் | கொறடா கோவி செழியன் | அண்ணா நகர் மெயின் ரோடு 21 வது வார்டு |
| திருநின்றவூர் நகரம் | தி.வை.இரவி | ராஜீவ் காந்தி | CTH ரோடு 6 வது வார்டு |
| திருமழிசை பேரூர் | தி.வே.முனுசாமி | மதிவதனி | தெற்கு மட வீதி 12 வது வார்டு |

எனவே மேற்குறிப்பிட்டுள்ள தெருமுனை கூட்டங்களுக்கான ஏற்பாடுகளை அந்தந்த பகுதி. ஒன்றிய நகர பேரூர் பகுதி கழக செயலாளர்கள் ஒத்துழைப்புடன் அந்தந்த பகுதி. ஒன்றிய கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஏற்பாடு செய்கிறார்கள், இக்கூட்டங்களில் அந்தந்த பகுதியில் உள்ள கழக நிர்வாகிகள், இளைஞர் அணி. மாணவர் அணி. மகளிர் அணி மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் அனைவருக்கும். தகவல் தந்து அனைவரையும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பாக செய்து நடத்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**ஆவடி சா.மு.நாசர்**

செயலாளர், திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக

# பெங்களூருவில் மோசமான வானிலை:

## விமானங்கள் சென்னைக்கு திரும்பல்!

சென்னை,மே.22

பெங்களூருவில் மோசமான வானிலை காரணமாக 3 உள்நாட்டு விமானங்கள் சென்னைக்கு திருப்பி விடப்பட்டது. சென்னையில் இருந்து புறப்பட்ட இண்டிகோ ஏர்லைன்ஸ் மாலை 3.10 மணிக்கு பெங்களூருவில் தரையிறங்க முடியவில்லை.

பெங்களூருவில் விமானத்தை தரையிறக்க முடியாததால் இண்டி ஏர் லைன்ஸ் விமானம் மீண்டும் சென்னை திரும்பியது. கொல்கத்தா, புனேவில் இருந்து பெங்களூரு சென்ற விமானங்க சென்னைக்கு திருப்பிவிடப்பட்டன.

சென்னைக்கு திருப்பி விடப்பட்ட விமானங்களில் வந்த பயணிகள் சென்னை விமான நிலையத்தில் தங்க வைக்கபட்டுள்ளனர். மேலும் பெங்களூருவில் கனமழை காரணமாக சுரங்கப்பாதையில் தேங்கிய தண்ணீரில் கார் சிக்கி பெண் உயிரிழந்தார்.

# திருநெல்வேலி மத்திய மாவட்டப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

திருநெல்வேலி மத்திய மாவட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றி வரும் அப்துல் வகாப் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக திரு. **டி.பி.எம்.மைதீன்கான்**, (எண்.110, சிக்கந்தர்புரம் தெரு, குற்றாலம் சாலை, திருநெல்வேலி டவுண், திருநெல்வேலி 627 006) அவர்கள் திருநெல்வேலி மத்திய மாவட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட, மாநகர நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18 .
நாள் : 21.5.2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.





தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் மும்முடி சோழன் என்னும் சோழர்களின் உண்மையான வரலாற்றைப் பேசும் நாடகத்தின் பாடல் மற்றும் இசை வெளியீட்டு விழா சென்னையில் நடைபெற்றது . தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் தலைவர் வாகை சந்திரசேகர் வெளியிட உறுப்பினர் செயலாளர் திருமதி விஜயா தாயன்பன் பெற்றுக்கொண்டார். உடன் கவிஞர் நெல்லை ஜெயந்தா ,தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் ஔவை அருள், இசை அமைப்பாளர் தாஜ் நூர், தயாரிப்பாளர் வைத்தீஸ்வரன், இணை தயாரிப்பாளர் கஜேந்திரபாபு, மக்கள் தொடர்பு அலுவலர் பொன்னேரி பிரதாப் ,நாடக ஆக்க இயக்குநர் ஆர்.கே. ஆகியோர் உள்ளனர்.

# ஒழுங்கு நடவடிக்கை!

## தலைமைக் கழக அறிவிப்பு

மதுரை மாநகர் மாவட்டத்தைச் சேர்ந்த மிசா பாண்டியன் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டதால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்டஅனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (SUSPENSION) வைக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 21.05.2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் வாலாஜாபாத் தெற்கு ஒன்றிய இளைஞரணி சார்பில் திம்மராஜம்பேட்டை ஊராட்சியில் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் வி.குமரன் ஏற்பாட்டில் திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர் தக்கோலம் தேவபாலன், மாவட்டக் கழக செயலாளர் க.சுந்தர் எம்எல்ஏ ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். உடன் ஒன்றிய செயலாளர் பி.சேகர், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் யுவராஜ், மாவட்ட நெசவாளர் அணி தலைவர் எ.கணேசன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் டி சஞ்சய் காந்தி. ஒன்றிய நிர்வாகிகள் ரா.குப்புசாமி, திருமதி.அமலி சுதா, எம்.சண்முகம், க.செந்தமிழ் செல்வன், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் க. நவநீதகிருஷ்ணன், எல் ரமேஷ். ஊராட்சி மன்ற தலைவர் திருமதி கல்பனா ஆறுமுகம், கிளை நிர்வாகிகள் முருகவேல், தெய்வசிகாமணி, வேல்முருகன் உள்ளிட்ட கழகத்தினர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.